செய்தி வெளியீடு எண்: 645 நாள்:07.09.2020

**<u>இன்று (7.9.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை:</u>**

அனைவருக்கும் வணக்கம்.

திருவள்ளூர் மாவட்டம் சென்னையை ஒட்டிய மாவட்டமாக இருப்பதால், திருவள்ளூரிலிருந்து சென்னைக்கும் சென்னையிலிருந்து திருவள்ளூருக்கும் அதிக மக்கள் வந்து செல்லக்கூடிய நிலை உள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் பெரிய தொழில்கள் மற்றும் தொழிற்பேட்டைகள், சிறு தொழில்கள் நிறைந்துள்ளதால், பணிக்கு வந்து செல்பவர்கள் தொழிற்சாலைகளில் பணிபுரியும்பொழுது மாண்புமிகு அம்மாவின் அரசால் அறிவிக்கப்பட்ட வழிமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும். சென்னையில் கொரோனா வைரஸ் தொற்று படிப்படியாக குறைந்து வருகிறது. அதேபோல, திருவள்ளூர் மாவட்டதில், முதலில் அதிகமாக இருந்த தொற்று, தற்போது மாவட்ட நிர்வாகம், சுகாதாரத் துறை மற்றும் உள்ளாட்சித் துறை எடுத்த நடவடிக்கைகள் காரணமாக படிப்படியாகக் குறையத் தொடங்கியுள்ளது. இருந்தாலும், மாவட்ட நிர்வாகம், சுகாதாரத் துறை மற்றும் உள்ளாட்சித் துறை மக்களுக்கு மேலும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

சென்னையிலிருந்து திருவள்ளூர் வரும் வழியில் சுமார் 40 சதவிகிதம் நபர்கள் முகக்கவசம் அணியாமல் உள்ளதைக் காண நேர்ந்தது. அவர்களும் முகக்கவசம் அணியக்கூடிய வகையில் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை மேலும் அதிகரிக்க வேண்டும். ஏனென்றால், இந்தத் தொற்றிற்கு ஒரே மருந்து விழிப்புணர்வுதான். மக்களிடம் விழிப்புணர்வு இருந்தால் தான் இந்த தொற்று பரவலைத் தடுக்க முடியும். இது ஒரு தொற்று நோய், எளிதாகப் பரவக் கூடியது. இதற்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்காத

நிலையில் நாம் இந்த தொற்றை சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இந்த நோயின் தன்மை மற்றும் வீரியத்தை அறிந்து பொதுமக்கள் அரசு அறிவிக்கின்ற வழிமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும், கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும்.

திருவள்ளூர் மாவட்டம் வேளாண் தொழில்கள் நிறைந்த பகுதி. ஏரிகள் மற்றும் ஏரிப்பாசனம் நிறைந்த மாவட்டம். குடிமராமத்துத் திட்டம் என்னால் அறிவிக்கப்பட்டு முதற்கட்டமாக காஞ்சிபுரம் மாவட்டம், மணிமங்கலம் கிராமப் பகுதியிலுள்ள ஏரியிலும் பின்னர் திருவள்ளூர் மாவட்டத்திலும் துவக்கி வைக்கப்பட்டது. சென்னைக்குக் குடிநீர் வழங்கக்கூடிய ஏரிகள் இந்த மாவட்டத்தில் உள்ளன. ஏரிகளின் கொள்ளளவை அதிகரித்து, பருவ காலங்களில் பொழிகின்ற மழை நீர் முழுவதையும் சேமித்து வைக்க வேண்டுமென்பதற்கு குடிமராமத்துத் திட்டம் கொண்டு வரப்பட்டு தற்பொழுது சிறப்பாக செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள ஒரு ஏரியில் நானே நேரில் வந்து இப்பணியைத் துவக்கி வைத்தேன். இது ஒரு சிறப்பான திட்டமென்று வேளாண் பெருமக்களும், பொது மக்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த திட்டத்தை, முழுக்க முழுக்க விவசாயிகளை உள்ளடக்கி நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். குடிமராமத்துத் திட்டப் பணிகள் முழுவதும், அந்தந்தப் பகுதிகளிலுள்ள விவசாய சங்கங்கள், பாசனதாரர்கள், சம்பந்தப்பட்ட ஆயக்கட்டுதாரர்களிடம் ஒப்படைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. தற்பொழுது தமிழகம் முழுவதும் நல்ல மழை பொழிந்து கொண்டுள்ளது, பல ஏரிகள் நிரம்பி கொண்டிருக்கின்றன. குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக தமிழகம் முழுவதும் தூர்வாரப்பட்ட ஏரிகளில் தண்ணீர் சேமிக்கக்கூடிய சூழ்நிலை அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோல, இந்த மாவட்டத்தில் அதிக தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. பொதுப்பணித்துறை நீர்வள ஆதார துறையின் மூலமாக, கடந்த 2 ஆண்டுகளில் குடிமராமத்து திட்டம் மூலம் ரூபாய் 18.33 கோடி மதிப்பீட்டில் 107 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2019–20ஆம் ஆண்டு சுமார் ரூபாய் 10.17 கோடி மதிப்பீட்டில் 26 குடிமராமத்துப் பணிகள் முடிக்கப்பட்டு 4 பணிகள் மட்டும் முடியும் தருவாயில் உள்ளன. அதேபோல, எண்ணூர் முதல் எர்ணாவூர் குப்பம் வரை முதல் கட்டமாக 9 எண்கள் கொண்ட தூண்டில் வளைவுகள் அமைக்கும் பணி சுமார் ரூபாய் 38 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. மாதவரம், அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகளை புனரமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் மீட்டெடுப்பு பணி ரூபாய் 26 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது. தடுப்பணையைப் பொறுத்தவரை, நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள்– கொசஸ்தலையாற்றின் குறுக்கே புதுக்குப்பம் மற்றும் குதிரைப்பள்ளம் இடையிலான கிராமத்தில் தடுப்பணை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

புட்லூார் கிராமத்தில் கூவம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. ஊத்துக்கோட்டை வட்டத்தில் கண்டலேறு–பூண்டி கால்வாயில் சேதமடைந்த பல பகுதிகளை வலுப்படுத்தும் பணியும் முடிக்கப்பட்டுள்ளது. நீர்வள நிலவளத் திட்டம் மூலமாக, பகுதி–2ல் 11 ஏரிகள் மற்றும் 12 கொண்டங்கள் ஆகியவற்றை புனரமைக்கும் பணிகள் ரூபாய் 3.79 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. மேலும் பல பணிகள் தொடங்கப்படவுள்ளன. பூந்தமல்லி வட்டத்தில், கூவம் ஆற்றின் குறுக்கே பழுதடைந்த கொரட்டூர் அணைக்கட்டை சுமார் ரூபாய் 32.45 கோடி மதிப்பீட்டில் மறுகட்டுமானம் செய்யும் பணி துவங்கப்பட்டுள்ளது.

கண்டலேறு–பூண்டி கால்வாயினை 10 கிலோ மீட்டர் வரை வலுப்படுத்தும் பணிகள் சுமார் ரூபாய் 24.79 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளன. தாமரைப்பாக்கம் அணைக்கட்டின் துண்டிக்கப்பட்ட சுவற்றை மேம்படுத்தும் பணி சுமார் ரூபாய் 4 கோடி மதிப்பில் தொடங்கப்படவுள்ளது. திருத்தணி வட்டம், இலுப்பூர் கிராமத்தின் அருகே நகரி ஆற்றின் குறுக்கே ரூபாய் 18 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி, கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்ட ஊட்டுக் கால்வாய் ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் பலப்படுத்தும் இரண்டு பணிகள் பரிசீலனையில் இருக்கின்றன. இவ்வாறு, இந்த மாவட்டத்தில் பல தடுப்பணைகள் கட்டும் பணிகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

பட்டரைப்பெரும்புதூரில் அரசு சட்டக் கல்லூரிக் கட்டடம் ரூபாய் 60 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. திருவள்ளூரில் கூடுதல் நீதிமன்றம், இடைநிலைக் கல்வித் திட்டத்தில் மாவட்டம் முழுவதும் அரசு உயர்நிலைப்பள்ளிகளுக்கு புதிய வகுப்பறை கட்டடங்கள், அம்பத்தூர் தமிழ்நாடு தொழிலாளர்கள் கல்வி நிறுவனக் கட்டடங்கள், திருவள்ளூரில் அரசு மருத்துவமனை கூடுதல் கட்டடம், பள்ளிப்பாளையம், திருப்பாலைவனம் மற்றும் ஆண்டார்மடம் ஆகிய இடங்களில் புயல் பாதுகாப்பு மையக் கட்டடம் என பல கட்டடங்கள் பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த மாவட்டத்தில் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு ரூபாய் 386 கோடி மதிப்பீட்டில் அமைக்க

பணிகள் தொடங்கப்பட்டு, தற்பொழுது கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழக வரலாற்றிலேயே11 அரசு மருத்துவக் கல்லூரிகளை சுமார் இரண்டாண்டு காலத்தில் பெற்று, அதற்கான கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. வரும் நடப்பாண்டில் இந்த மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை நடைபெறும் என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

நெடுஞ்சாலைத் துறையில் பல பாலப் பணிகள் இந்த மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. திருத்தணி மற்றும் திருவள்ளூருக்கு புறவழிச் சாலைகள் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. பல குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. திருத்தணி நகராட்சிக்கு சுமார் ரூபாய் 110 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டம் 2022ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்படும்.

ஆவடி மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் ரூபாய் 158 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த மாவட்டத்திலுள்ள 16,019 சுய உதவிக் குழுக்களில் 1,31,943 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களுக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு இதுவரை ரூபாய் 904 கோடி கடனுதவி வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த இரண்டாண்டுகளில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ், 3,292 மகளிருக்கு ரூபாய் 823.30 லட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்காக நுண்ணீர் பாசனத் திட்டம் போன்ற பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. திருவள்ளூர் மற்றும் சோழவரம் வட்டாரங்களில் ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில், முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு 230 கோடியே 97 லட்சம் ரூபாய் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளன. வர்தா புயலால்

பாதிக்கப்பட்ட 60,000 விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையாக ரூபாய் 50 கோடி வழங்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில், மீன்பிடி குறைவு காலத்திற்காக ரூபாய் 5,000/— என, மூன்றாண்டுகளில் 35,499 பயனாளிகளுக்கு சுமார் ரூபாய் 17.75 கோடி வழங்கப்பட்டுள்ளது. மீனவ நல வாரிய உறுப்பினர்களுக்கு கொரோனா சிறப்பு நிவாரணமாக தலா ரூ.1000/— வீதம் இரண்டு தவணையாக 38,102 பயனாளிகளுக்கு ரூபாய் 7.68 கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தில் ஜவஹர்லால் நேரு தேசிய சீரமைப்புத் திட்டத்தின் கீழ், கூடப்பாக்கத்தில் 1,024 பயனாளிகளுக்கு ரூபாய் 71.44 கோடி செலவில் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. ராஜீவ் காந்தி அவாஸ் யோஜனா, பிரதமரின் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம், பங்களிப்புடன் திறனுக்கேற்ப வீடு கட்டும் திட்டம் என பல திட்டங்களின் வாயிலாக மக்களுக்கு அம்மாவின் அரசால் வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மறு குடியிருப்புத் திட்டத்தில், ரூபாய் 516 கோடி மதிப்பீட்டில் 3,880 அடுக்குமாடி குடியிருப்பு அமைக்கும் பணிகள் அடுத்த மாதம் துவங்கும்.

அனைவருக்கும் வீட்டுவசதித் திட்டம்—பயனாளிகள் தாங்களாகவே வீடு கட்டும் திட்டத்தில் ரூபாய் 479.70 கோடி மதிப்பீட்டில் 15,990 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டும் பணிகளில் 1689 பணிகள் முடிவுற்றுள்ளன, 6,493 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன, 7,808 பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்படி மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை அம்மாவின் அரசு துரிதமாக செயல்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமழிசை துணைக்கோள் நகரத் திட்டம் பகுதி–1ல் ரூபாய் 259.49 கோடி மதிப்பீட்டிலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அதேபோல, அயம்பாக்கம் கிராமத்தில் 608 குடியிருப்புகள் அறிவிக்கப்பட்டு, முதற்கட்டமாக 336 குறைந்த வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள் நிறைவு பெற்று பயனாளிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

இன்றைக்கு தமிழகம் கல்வியில் புரட்சியை கண்டிருக்கிறது. கல்வி கற்போருடைய எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது. அதற்குக் காரணம் அம்மாவின் அரசு கல்வியின் தரத்தை உயர்த்தி இருப்பதுதான். கடந்த மூன்றாண்டுகளில், 9 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 12 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. மேலும் மாணவச் செல்வங்கள் அந்தந்த பகுதிகளிலேயே உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையும் உருவாகியிருக்கிறது. அதேபோல, இந்த மாவட்டத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அதிக அளவில் இருக்கிறது. உலக முதலீட்டாளர் மாநாட்டின் மூலமாக, இந்த மாவட்டத்தில் ரூபாய் 4,031 கோடி முதலீட்டில், 16,225 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 4 தொழிற் திட்டங்கள் தங்களது வணிக உற்பத்தியை துவங்கியுள்ளன. இது ஒரு வரலாற்றுச் சாதனை. மாண்புமிகு அம்மாவின் அரசு தொழிற்புரட்சியை ஏற்படுத்துவதற்காக தொழில் முதலீட்டாளர்களுக்கு பல்வேறு சலுகைகளை அளித்து, அதன் மூலம் புதிய, புதிய தொழில்கள் தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. இதனால் படித்த இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாகி வருகின்றன.

2019ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர் மாநாட்டின் மூலம் திருவள்ளூர் மாவட்டத்தில் ரூபாய் 620 கோடி முதலீட்டில் 450 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், பல்வேறு நிறுவனங்கள் தங்களது உற்பத்தி பணியைத்

துவங்கியிருக்கின்றன. மேலும், 8 நிறுவனங்கள், ரூபாய் 13,300 கோடி முதலீட்டில் 1,03,700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ஆயத்தப் பணிகளை மேற்கொண்டுள்ளன. ஆகவே, திருவள்ளூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு அம்மாவின் அரசு, பல்வேறு திட்டங்களை அறிவித்து, அவை அனைத்தும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்ற செய்தியை தெரிவிக்க விரும்புகின்றேன்.

உலகத்தையே அச்சுறுத்திக் கொண்டிருக்கிற கொரோனா வைரஸ் நோய்த் தொற்று உலகம் முழுவதும் பரவி, இந்தியாவிலும், தமிழகத்திலும் பரவியது. மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொண்ட துரித நடவடிக்கைகளால் இத்தொற்று பரவல் படிப்படியாக நாம் குறைந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது நாள் ஒன்றுக்கு 85,000 பரிசோதனைகள் மேற்கொண்டதன் விளைவாக, இன்றைக்கு இந்த நோயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறோம். கர்நாடகா, மகாராஷ்ட்ரா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் கொரோனா நோய்த் தொற்று குறைவாக இருந்தது, இப்பொழுது அங்கும் படிப்படியாக அதிகரித்திருக்கின்றது. ஆனால், தமிழகத்தில் முன்பு கொரோனா நோய்த் தொற்று ஆங்காங்கே பரவியிருந்தது. அரசு எடுத்த துரித நடவடிக்கைகளின் காரணமாகவும், பொதுமக்களுக்கு தகுந்த விழிப்புணர்வை ஏற்படுத்தியதன் விளைவாகவும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியிருக்கிறது. இது படிப்படியாகக் குறைந்து, இயல்பு நிலைக்குத் திரும்ப வேண்டும் என்பதுதான் அரசினுடைய எண்ணம். அதன் அடிப்படையில், அனைத்து தளர்வுகளும் வழங்கப்பட்டு விட்டன. தொழிற்சாலைகள் முழுமையாக இயங்கலாம். போக்குவரத்து, மாநிலங்களுக்கிடைய தவிர்த்து, மற்ற மாவட்டங்களுக்கிடையே செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. திருக்கோயில்கள் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி பல தளர்வுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், கொரோனா நோய்

தொற்று பரவல் முழுமையாக குறையாத காரணத்தால், பள்ளிகள், கல்லூரிகள், திரையரங்குகள் ஆகியவற்றை திறக்க முடியவில்லை. எனவே, பொதுமக்கள் விழிப்போடு இருந்து, அரசு அறிவித்த வழிமுறைகளை தவறாமல் பின்பற்றினால், இந்த நோய்ப் பரவலைத் தடுத்து, இயல்பு நிலைக்கு திரும்பலாம். அதற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பை நல்க வேண்டுமென அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டம் சென்னையை ஒட்டி இருப்பதாலும், தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டமாக இருப்பதாலும், பொதுமக்கள் எச்சரிக்கையோடு இருந்து, அரசு அறிவித்த வழிமுறைகளை பின்பற்றி நோய்ப் பரவலில் இருந்து தம்மை காத்துக் கொண்டு, கொரோனா நோய்த் தொற்று இல்லாத மாவட்டமாக விரைவில் வருவதற்கு அனைவரும் துணை நிற்க வேண்டுமென்று அன்போடு கேட்டு என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**